உ

ஶிவாப்⁴யாம் நம:।

ஶ்ரீ ஶிவலோகஜநக ஜநநீஹ்ருதயயோ:

ஶ்ருதிஸம்வேத்³யா:

பார்வதீ பரமேஶ்வரயோ:

ப்ரணயகலஹ வர்ணநம்॥

பார்வதீ பரமேசுவரர்களின்

திருவூடல்

கண்டனூர்

சிவஸ்ரீ. அருணசலசிவாசாரியர் அவர்கள்

குமாரர்

இராமநாதக்குருக்கள்

இயற்றிய தமிழுரையோடு,

யாழ்ப்பாணம் அச்சுவேலி

சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

பருத்தித்துறை,

கலாநிதியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1937.

உ

[illegible]

ஸ்ரீ [illegible]

[illegible]

பார்வதீ பரமேச்வரயோ:

ப்ரணய கலஹ வர்ணநம் ||

பார்வதீ பரமேசுவரர்களின்

திருவூடல்.

கண்டனூர்

சிவஸ்ரீ. அருணசலசிவாசாரியர் அவர்கள்

குமாரர்

இராமநாதக்குருக்கள்

இயற்றிய தமிழுரையோடு,

யாழ்ப்பாணம் அச்சுவேலி

சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

பருத்தித்துறை,

கலாநிதியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1937.

உ

சிவமயம்.

முகவுரை.

ஆதி தம்பதிகளின் பிரணய கலஹ வர்ணனமாவது முதற் சதிபதிகளின் ஊடல் வர்ணனை என்பதாம். பார்வதீபரமேசுரர்களே ஆதிதம்பதிகளாவார்கள். காளிதாஸமஹாகவியும் "வாக்கும் பொருளும்போன்ற ஜகத்பிதார்களான பார்வதீபரமேசுரர்களை நமஸ்கரிக்கிறேன்" என்றார். நீலகண்ட மகாகவியும் வணங்குகிறேன் என்று கூறி, கர்மாவைச் சொல்லாதுவிடுத்தார். யாரையென்று ஏன்சொல்லவில்லைஎன்கிற சங்கையையுந்தோற்றுவித்து, அகிலலோக ஜனக ஜனனீபூதர்களான தம்பதிகளை (சதிபதிகளை) தம்பதீ என்று துவிவசனத்தில் அதாவது இருபொருளாகச் சொல்ல எனக்குஇஷ்டமில்லை; தம்பதி சப்தத்தை ஏகவசனத்தில் (ஒருமையில்) சொல்ல வடமொழி இலக்கணத்தில் விதியில்லை; ஆகையால் யாரை என்கிற கர்மாவைச் சொல்லவில்லை என்றார். அப்படிப்பட்டவர்களிடத்தில் ஊடல் எவ்வாறு நிகழுமென்றால், லோகாநுக்கிரகார்த்தமாக, பந்தப்பட்ட ஆன்மாக்களை உஜ்ஜீவிக்க வேண்டி, நிஷ்கள ஜ்யோதிமூர்த்தியான பரமசிவம் சகளத்திருமேனிகொண்டு பல லீலைகளைச்செய்தருளியதாக வேதேதிஹாஸாதிகளால் நன்கு தெரிகிறது.

ஆதிசதிபதிகள் தாம் லீலாமாத்திரமாகச் சதுரங்கமாடுகையில் பரமசிவன் தோல்வியுற்றதாகக்காண்பித்து, தாமே ஜயமடைந்ததாக வாதித்தகாலையிலும், விஷ்ணு சக்தி மோகினியாய் வரப் பரமசிவன் தாருகாவன சஞ்சாரத்தைப் பராசக்தியாகிய தாமின்றி நடாத்தியதற்காகவும், இன்னும் இவைபோன்ற பல சரித்திரங்கள் நடந்தகாலங்களிலும், சக்தி ஊடலுற்றதாய்ப் புராணவாயிலாகத் தெரிகிறது. மேலும், பிரணயமென்பது பிரேமாஸ்பதமேயொழிய வேறல்ல; மானுஷீகமுறையிலுங்கூடப் பிரிந்து கூடல் மிக்க இன்பம்பயக்கத்தக்கதொன்றே. இது நிற்க.

பரமாப்தபதியாகிய பசுபதி லோகாநுக்கிரகார்த்தம் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிராநின்ற ஸ்தலங்கடோறும் அபக்குவான்மாக்களின் பக்தி திருடீகரிக்கும்பொருட்டு, முற்காலத்தில் அப்பகவானாற் செய்தருளப்பட்ட லீலாவிநோதங்களை உத்ஸவகாலங்களில் நடாத்தவேண்டுமென்று சிவாகமம் விதிக்கிறது. பூர்வத்தில், பரமன் நடத்தியலீலைகள் பலவும் திருவாலவாய், திருவண்ணாமலை, திருச்செங்காட்டங்குடி முதலிய பல தலங்களிலும் நடத்திக்காட்டப்படுகின்றன. அந்தந்தத் தலபுராண சம்பந்தமான லீலைகள் ஆங்காங்கு நடைபெற்றாலும், எல்லாச் சிவாலயங்களிலும் திருக்கல்யாணம், திருநடனம், கன்மவர்தஇருடிகளை வென்று அநுக்கிரகித்தபிக்ஷாடனோற்சவம், திருவூடல் முதலிய உத்ஸவங்களை நடத்தவேண்டும். உற்சவத்தின் ஒவ்வொருகிரியைகளும் பஞ்சகிருத்தியங்களை உணர்த்துவதாகும். மஹோத்ஸவத்தில் அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம், துவஜாரோஹணம், திருக்கல்யாணம் என்பன சிருஷ்டியை உணர்த்தும். வாஹனாரோஹணம், ஹோமம், பலி இவைகள் திதியைக்குறிக்கும். இரதோத்ஸவம், கிர்ஷ்ணகந்தம், சூர்ணோத்ஸவமிவைகள் சங்காரத்தைக்குறிக்கும். மௌனோத்ஸவம்திரோபவத்தைக்குறிக்கும். சக்தியுத்ஸவம் (திருவூடல்) அநுக்கிரகத்தைக்குறிக்கும். ஸ்காந்தபுராணத்திலே, ஊடலான தேவியைப் பகவான் லீலாமாத்திரமாகச்சமாதானத்தின்பொருட்டு வேண்டிக்கொண்டஅவஸரம் பிரார்த்தனாமூர்த்தமென்று கூச மூர்த்திபேதங்கூறியவிடத்தில் கூஉவது மூர்த்தயாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த அநுக்கிரகஉத்ஸவவிஷயமாக ஆகமத்தில் கூறுவதாவது:—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[சக்தியுத்ஸவத்தைச் செய்யவேண்டும்; வ்யவஹாரிக வாக்கியங்களைப் படித்துக்கேட்கும்படி செய்யவேண்டும்; தேவியின் பிரணயகோபத்தைப்போக்கியே ஆலயத்தை அடையவேண்டும்; அந்தக்காலத்தில் ருத்திரகன்னிகைகள் வாழைமட்டையால் பக்த ஜனங்களை அடிக்கவேண்டும்.] என்பதே.

"வ்யவஹாரிகவாக்யம் ச்ராவயித்வா தத³நந்தரம்|
தேவீப்ரணயகோபம் ச வ்யபோஹ்யாலயம் விசே
த்||"

என்னும் வாக்கியத்தினால், அம்பிகை ஊடலாவதற்குக் காரணத்தையும், அதற்கு இறைவன் கூறும் சமாதானத்தையும், தேவியின் எதிர்மொழியையும், பரமனின் பிரார்த்தனையையும் சிரவணம் செய்வித்து, அம்பிகையின் கோபத்தைப்போக்கி ஆலயமடைக என்றதனானும் பிறவாற்றானும் ஊடலுற்சவப்பெருமையும் வசனம் வாசித்தலின் அவஸ்யமும் நன்குதுலங்கும். அவ்வசனமும் சந்தர்ப்பத்திற்கு ஏதுவாகவும், புராணாதிகளில் உள்ளதாகவும், பக்தியை யுண்டுபண்ணக்கூடியதாகவும், முரணின்றியுமிருத்தல் வேண்டுவது அவஸ்யம்.

பரமசிவன் பிக்ஷாடனத் திருக்கோலமும் விஷ்ணு மோகினிவடிவமுங்கொண்டு எழுந்தருளிவர, கன்மவாதவெறிகொண்ட தாருகாவனத்து இருடிகள்தவமும், இருடிபத்தினிகள் மனவுறுதியுங் கெட்டுப்போயின. அதனால் மிக்கவெகுளிகொண்ட இருடிகள் வேள்வியாற்றிவிடுத்த முயலகனை மிதித்தும், புலியைஉரித்துத் தரித்தருளியும் வேறுசிலவற்றைத் திருக்கரங்களிற்றாங்கியும் பரமசிவன் அன்னவர்கட்குப் புத்திபுகட்டித் திருநடனஞ்செய்து காத்தமையை, தாமின்றிநடாத்தியதற்காக அம்பிகை ஊடலாக, சிவபெருமான் தேவியைச் சமாதானப்படுத்தி அவ்வன்னையின் வேண்டுகோளுக்கிணங்கி நடாத்திய திருநடனமே ஸப்ததாண்டவத்தில் மூன்றாவதான கௌரீதாண்டவமெனப்படும் என்பதனாலும், "கௌரியின்லீலைகளோடு நடேசருக்கு உத்ஸவத்தைச் செய்யவேண்டும்" என்கிற சிவாகமப்பிரமாணத்தாலும், இவ்வுத்ஸவம் நடேசப்பெருமானுக்குரியதாக விதிக்கப்பட்டதென்பது பெறப்படும் என்க.

இவ்வுத்ஸவத்தில்,

"[illegible]
[illegible] ।"

என்பதுபோன்ற பிராமாண்யத்தினால் ருத்திரகணிகையர் (வேசியரல்லாதார்) கையில் வாழைபட்டைகொண்டு பக்த ஜனங்களை அடிக்கவேண்டுமென்று கூறி, அதனால் அஞ்ஞான நாசனமேற்படுமென்ற பயனும் ஆகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

எக்காலத்தும் சுதந்திரமில்லாத அபலையினிடமாகப் பலர் பார்த்துப் பரிகசிக்கக்கூடியநிலையில் தீரபுருஷனொருவன் ஆணவத்தைவிடுத்து, அடிபடவேண்டுமானால் "நாம் யார்? நம்மை அடிப்பவர் யார்? அடிக்கக்கட்டளையிட்டதெது? அடிபடுவதெது? பௌதிக சரீரமல்லவா! நமக்கும் சரீரத்திற்குமுள்ள சம்பந்தம், பழுத்தமரத்தில் புசிக்கவந்த கிளிபோல, கர்மபலனையனுபவிக்க ஆன்மா சரீரசம்பந்தப்பட்டதன்றி வேறென்ன? அநித்தியமாகிய தேகாபிமானக்கேடால் சிவாஞ்ஞையைத் தள்ளலாமா?" என்பதுபோன்ற விசாரத்தால் தேகத்தின் நிலையாமையை அறிந்தாலன்றி எப்படி உடன்படுவான். இதனால், சரீரான்மஸம்பந்தம் கர்மானுபவார்த்தமென்றும், சரீரம் அநித்தியமென்றும், அந்நிமித்தமாக அளவுகடந்த அபிமானம்வைத்தல் அடாதென்றும், தேகசம்பந்தப்பட்டுழலாமல் முக்கரணங்களாலும் இறைவனை வழிபடவேண்டுமென்றும், விதிவிலக்குகளை விளக்கும் பதிநூல்கள் சிவாஞ்ஞையென்றும், அதனைப் புறக்கணித்து விடுதலைபெற முடியாதாகையால், நன்னூல்வழி சன்மார்க்கமடையவேண்டுமென்றும் தெரிந்துகொள்ள ஏதுவேற்படுவதால் அஞ்ஞானம்போமென்று பிரயோஜனம் கூறப்பட்டது.

மேலும், சதுரங்கலீலையில் இச்சாமாத்திரையானே தோல்வியுற்ற பரமனார் குதர்க்கம்பேசிய காரணத்தால், தேவி சினமுற்றவராய், இறைவனாரின் நடத்த லக்ஷணங்களிற் சிலகூறி நிந்திக்க, அவ்வம்மையின் சினமொழியச் சுந்தரவுருக்கொண்ட இறைவனின் சாயாரூபமேவன்றொண்டப்பெருமானாதலாலும், தம்பிரான்றோழரென்றும், சகமார்க்கமாகப் பக்திசெய்தாரென்றும் ஓதப்

படுவதனாலும், உலகியலில் ஸ்நேகிதரைக்கொண்டு அந்தரங்ககாரியங்களை முடித்துக்கோடல் வழக்காதலாலும், நன்றிசெய்தாரொருவர்க்குச்சந்தர்ப்பம்வாய்த்தபோதுஎத்தனைகஷ்டம்வந்தெய்தினும் பின்வாங்காது பிரதியுபகாரம் செய்துதீரவேண்டுமென்பதை அறிவுறுத்தும்பொருட்டு, அந்நாள் பரவையூடலைப்பரமன் தீர்த்தவாறு அம்மையூடலைச் சுந்தரர் தீர்த்ததாகக்கொள்வது வழக்கத்தில்வந்ததுபோலும். நிற்க.

மேற்கூறியவாறு வியவஹாரிக வாக்கியங்களை வாசித்துக் கேட்கும்படி செய்யவேண்டும் என்கிறவிதியை அனுசரித்து, பல பெரியோர்கள் எழுதிவாசித்துவந்த பலபிரதிகளையுந்தழுவி, எனது பெரியதகப்பனார் சிவஸ்ரீ. சுப்பிரமணிய சிவாசாரியார் ஒரு பிரதிசெய்து, அதைச் சுப்பிரமணிய சாஸ்திரிகளைக்கொண்டு சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்த்துள்ளார். அச்சாஸ்திரிகளின் ஊர்முதலானமற்றவிபரம் தெரியவில்லை. அப்பிரதியை மொழிபெயர்த்து அச்சிடவேண்டுமென்கிற எண்ணம் எனக்கு உதித்தும் சந்தர்ப்பம் நேராமல் காலங்கடந்துவந்தது. இந்தச்சந்தியில், சிவபிரான்றிருவருள் யாழ்ப்பாணம் அச்சுவேலி, சிவஸ்ரீ. ச. குமாரஸ்வாமிக்குருக்கள் அவர்களின் சினேகத்தை எனக்குக் கூட்டி வைக்க, எனது விருப்பத்தை அவர்களுக்குத் தெரிவித்தேன். அவர்களும் அந்நூலை மொழிபெயர்த்து அனுப்பும்படியும், தாம் பரிசோதித்து அச்சிடுவதாகவும் எழுதியமையினாலே உரையும் எழுதி அனுப்பியுள்ளேன்.

இப்பதிப்பிற்கு முக்கிய காரணபூதர்களான குமாரஸ்வாமிக்குருக்களவர்கள் நீண்டஆயுளும் செல்வமும்பெற்று வாழும்படி எல்லாம்வல்ல சிவபெருமான்திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்.

அரு. இராமநாதக்குருக்கள்.

கண்டனூர்.

உ

கணபதிதுணை.

கத்தியரூப சிறப்புப்பாயிரம்.

பிரணய கலஹ வர்ணனம் என்னும் இவ்வடமொழிநூலை இயற்றியவர் சுப்பிரமணியசாஸ்திரிகள் என்பவர். இந்நூற்பெருமையையுணர்ந்து இதற்குச் சிறந்த தமிழ்உரையை எழுதியுதவியவர் சிவநேசன்முதலியபத்திரிகைகளிற் பற்பலவியாசங்களையெழுதி வெளியிடுபவரும், சமயசாஸ்திரபண்டிதரும், கண்டனூர் சிவஸ்ரீ அருணசல சிவாசாரியர் அவர்களின் குமாரரும் ஆகிய (திருப்பெருந்துறை) அகோரசிவாசாரியர் என்னும் இராமநாதக்குருக்களாவார். திருவூடல்விழாவின் தத்துவார்த்தமும், இவ்விழாவைச் செய்யவேண்டிய அவசியமும் பிறவும் குருக்களவர்களால் முகவுரையில் நன்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. "சத்தியுற்சவத்தைச்செய்யவேண்டும்; வியவஹாரிக வாக்கியங்களைப் படித்துக் கேட்கும்படி செய்யவேண்டும்" என்னும் சிவாகமவிதியை அநுசரித்து, சிவாலயங்களில் வாசிக்கத்தகுந்தமுறையில் இந்தநூல் இயற்றப்பட்டிருத்தலால், மேற்படி சிவாசாரியர் செய்த தமிழ் உரையுடன் பிரகடனம் செய்திருக்கின்றேன். சிவாசாரியர் அவர்கள் இன்னமும் இப்படியான அரிய நூல்களை எழுதி உபகரித்தலாகிய சிவபுண்ணியத்தைச் செய்யும்வண்ணம் சிவபெருமான் இவருக்கு அரோக திடகாத்திரத்தையும் பூரண ஆயுளையும் அருளும்வண்ணம் அப்பெருமானுடைய ஸ்ரீபாதகமலங்களைப் பிரார்த்திக்கின்றேன்.

அச்சுவேலி
ஈசுவரவரு மார்கழிமீ
திருவாதிரைநாள்.

இங்ஙனம்
ச. குமாரசுவாமிக்குருக்கள்.

உ

ஶிவமயம்

ப்ரணயகலஹவர்ணநம்

ஶுக்லாம்பரதரம் விஷ்ணும் ஶஶிவர்ணம் சதுர்புஜம் |
ப்ரஸந்நவதநம் த்யாயேத் ஸர்வவிக்நோபஶாந்தயே ||

ஸ்ரீமந் நடராஜப்பெருமானையும் ஸ்ரீ சிவகாமசுந்தரியையும் கிரமமாக எழுந்தருளச்செய்து, திருவீதிவலம்வரும்போது முன்னர் அம்பிகையை ஆலயத்துக்குள் சேர்த்து, பின்பு சுவாமியைக் கோபுரவாசலில் எழுந்தருளப்பண்ணி, பௌராணிகருக்குப் பரிவட்டமரியாதைசெய்து, பின்பு வாசிக்கவேண்டியது.

நூல்.

ருஷய:||

ஸூத ஸூத மஹாப்ராஜ்ஞ ஸமஸ்தஶாஸ்த்ரவிஶாரத |
சந்த்ரசேகரபாதாப்ஜப்ருங்காயிதமந: ப்ரபோ ||க||

புரா கதாபி ப்ரணயகலஹஶ்ஶிவயோஸ்த்வயா |
வர்ணிதஸ்தம் புநஶ்ஶ்ரோதும் கௌதுகம் ஹ்ருதி ந: ||

வக்துமர்ஹஸி யோகீந்த்ர வ்யாஸஶிஷ்ய மஹாமதே |
யதா தத்த்வம் விஜாநாஸி ஸர்வம் பௌராணிகோத்தம ||உ||

இதன்பொருள்:— நைமிசாரண்ய வாஸிகளான மஹரிஷிகள் ஸூதபுராணிகரை நோக்கிக் கூறுகிறார்கள். மஹாபிரஞ்ஞாவானும், ஸமஸ்தசாத்திரங்களையும் அறிந்தவர்களுள் சிறந்தவரும், சந்திரசேகரனுடைய பாதகமலங்களிலே வண்டாக பவித்தமனதையுடையவருமான சூதரே! சூதரே! பிரபுவே! முன்னொருசமயம் உம்மால் பார்வதீபரமேசுவர்களுடைய பிரணயகலஹமானது வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அதையேமறுபடியும் கேட்க எங்களுக்குச் சந்தோஷமாகையால், வியாசமஹரிஷியின் சிஷ்யரும் மகாபுத்திமானுமாகிய யோகீந்திரரே! பௌராணிகோத்தமரே! அந்தச் சரித்திரத்தின் தத்துவத்தை எப்படி அறிவீரோ, அப்படியே எல்லாவற்றையும் சொல்வதற்குத் தகுந்தவராகிறீர்.

[இவ்விடத்தில் முதலிற்கூறியதைத் திரும்பக்கூறுவது எங்கள் விருப்பத்தின் பொருட்டாதலால், அதில் அசிரத்தை கொண்டு சங்கிரகமாய்க் கூறிவிடலாகாது என்னுங் கருத்துடைய ராய், அதன் தத்துவமெப்படியோ அப்படியே எல்லாவற்றையும் ஒன்றும்விடாமல் கூறவேண்டுமென்றுவற்புறுத்தி, சூதரே! சூத ரே! என்று இருமுறையிரங்கிக்கேட்கிறூர்கள்.]

[illegible]
[illegible] | ச |

இ—ள்: இந்தவிதமாக வினவப்பட்ட மகாயோகியாகிய சூதர் புன்சிரிப்பினாலே மனதைக்கவர்ந்தவராய், முதற் சதிபதிக ளுடைய பிரணயகலஹத்தைச் சொல்வதற்கு ஆரம்பஞ்செய்கிறூர்.

[illegible]
[illegible] | ரு |

[illegible]
[illegible] | சா |

[illegible]
[illegible] | எ |

[illegible]
[illegible] | அ |

[illegible]
[illegible] | கூ |

[illegible]
[illegible] | க௦ |

[illegible] | க௦ இ |

இ—ள்: சூதர் சொல்லுகிருர்:— தனக்குமுன்னுண்டானவஸ்துவில்லாததாயும், சித்து ஆனந்தவடிவினதாயும், முதல்நடுஇறுதியில்லாததாயும், அவ்வியக்தமாயும், அபின்னமாயும், ஆகாசத்திற்கொப்பானதாயும், அழுக்கற்றதாயும், நிஷ்களமாயும், சாந்தமாயும், அளவுபடுத்தக்கூடாததாயும், அநாமயமாயும், எல்லாஉலகங்களுக்கும் காரணமாயும், இரண்டற்றதாயும், பராத்பரமாயும், வேதசிரசுகளாலே அறியத்தக்கதாயும், வாக்கு மனசுகளுக்கு விஷயமாகாததாயும் எந்தப் பிரமம்உள்ளதோ (திரிலோசனசிவாசாரியராலே ஶிவாஹ்வகம் ஜ்யோதி: என்று விளக்கப்பட்ட சிவமென்னும் ஜோதியோ) அந்த ஸ்வயம்பிரகாசமான சிவமே, லோகானுக்கிரஹம் செய்யும்காரணத்தால் பராசக்தியோடுகூட ஸகளராயும், மல்லிகைப்புஷ்பமும் சந்திரனும்போன்ற காந்தியுடையவராயும், மூன்றுகண்களுடையவராயும், ஸர்வேசுவரராயும், அர்த்தசந்திரதாரியாயும், பார்த்து ஆனந்திக்கத்தக்க சரீரமுடையவராயும், மங்களமூர்த்தியாயும், கரியகண்டத்தையுடையவராயும், ஜடாதாரியாயும், விபூதி ருத்திராக்கமாலைகளால் அலங்கரிக்கப்பட்ட திருமேனியையுடையவராயும், புலித்தோலாடை யுடையவராயும், சிரேஷ்டமான சர்ப்பாபரணங்களையுடையவராயும், பார்வதியோடு கூடினவராயும், சம்புவாயும், கைலாசாதியான க்ஷேத்திரங்களில் அடியார்களுக்கெல்லாம் சுலபராயும், பிரபுவாயும் இருந்து பக்தர்களை ஸம்ரக்ஷிக்கிருர்.

[illegible]॥ ।௧௧।

[illegible]।
[illegible]॥ । ।

[illegible]।
[illegible]॥ । ।

[illegible]।
[illegible]॥ ।௧௪।

[illegible]।
[illegible]॥ ।௧௫।

[illegible] ||

[illegible] |௧௭|

[illegible] ||

[illegible] |௨0|

[illegible] ||

[illegible] |௨௫|

[illegible]

இ—ள்: ஒருசமயம் பரமானந்த மூர்த்தியும், மங்களத்
தைச் செய்கிற தேவரும் பார்வதீநாதருமான சிவபெருமான்
அகில் தூபமிடப்பட்டதும், மேற்கட்டி (அஸ்மானகிரி) களாலும்,
மாலிகைகளாலும் அலங்கரிக்கப்பட்டதும், இரத்தின தீபங்
களால் அலங்கரிக்கப்பட்டதும், இரத்தின மயமானதுமான ஆயி
ரக்கால் மண்டபத்தில், ஹம்சபக்ஷிகளின் இறகுகளாற் செய்யப்
பட்ட மெத்தையுடன் கூடிய இரத்தின சிம்மாஸனத்தில் வீற்றி
ருந்து, திவ்விய கெந்தம் மாலிகை முதலியவைகளாற் சோபிக்கப்
பட்டவராயும், இரத்தின குண்டலம் தோள்வளை கிரீடம் முத

ளான வைகள்ால் அலங்கரிக்கப் பெற்றவராயும், நந்தி சண்டேசர் பிருங்கி முதலான மஹாபக்த ஜனங்களால் சூழப்பெற்றவராயும், அபயமுத்திரையோடுங் கூடிய திருக்கரத்தினாலே சம்ஸ்தபக்தர்க ளுடைய துக்கத்தைத்தீர்ப்பவராயும், தாசிகளுடைய தாமரை மலர் போன்ற கரங்களால் வீசப்பட்ட வெண்கவரியுடையவரா யும், வீணைவாத்தியங்களிலும், மனோகரமான கானங்களிலும் ஆஸக்தியுள்ள மனதையுடையவராயும், நிருத்யகேய வாத்தியங்க ளைப் பார்த்து, மயிர்க்கூச்செறிந்த திருமேனியையுடையவராயும், எல்லா உலகங்களுக்கு மநுக்கிரகிப்பதில் ஆசையுள்ளவராயும், நடனமாதர்களுக்கு ஆபரணம் முதலானவைகளைக் கொடுத்தார். ஒருசமயம், சதாசிவமூர்த்தியானவர் லோகாநுக்கிரகம் செய்யும் பொருட்டு ருத்திரகணிகைகளுடைய வீதியில் சஞ்சரித்தார். அந்த ருத்திரகணிகைகளாலே சம்புவானவர் இரத்தின புஷ்பங் களாலும், திவ்விய சந்தனங்களாலும் பூஜிக்கப்பட்டார். ஒருசம யம் தேவரான சங்கரரானவர் வளையல்வியாபாரத்தைச்செய்தார். ஒருசமயம் பிரபுவானவர் ருத்திரகன்னிகைகளுக்கு அபீஷ்டத் தைக் கொடுத்தார். ஈசானரென்னும் ஸ்வதந்திரரான பரமசிவன் இத்தன்மையாகத் தாருகாவனசஞ்சாரத்தினாலே தவஸ்திரீகளுக் குச் சந்தோஷத்தையுந் தாமொருவராகவே செய்தார். இவைய னைத்தையும் கௌரீசேவையில் ஆசக்தியுள்ளவர்களான சேடிகள றிந்து தேவியின் பொருட்டுத் தெரிவித்தற்குரிய சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். நர்த்தனத்தைச் செய்கிற தேவதேவரோடு கூட வீதியை அடைந்தவராகிய பார்வதியைப் பார்த்து, அப்பணிப்பெண்கள் வேகத்தோடு கூடினவர்களாய், அத்தேவியின் சன்னிதியை அடைந்து, பரமசிவனொருவராலே செய்யப்பட்ட எல்லாவற்றையுந் தெரியப்படுத்தினார்கள். அவர் களாலே சொல்லப்பட்டவற்றைக்கேட்ட பார்வதியானவர், கோ பத்தினால் வியாபிக்கப்பெற்றவராக ஆனார். (இது பூர்வவிருத்தாந் தம்.)

ஶ்ரீஉமாஹ்ருதயே ப்ரஸந்நவ்ருத்தாந்த॥ ।௨௪।

வாதம்ஃப்ரேஷயாவாஸ தத்தீப்தாப்யோ பவாவாதீ।
வதூவா தவ்வதாஷ்வாஸா வாஷ்யா பிஸ்ஸாம்வாஸ॥

[illegible]

இ-ள்: சங்கரரும், கௌரியைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசக்தியுள்ளவராய்வர, அந்தப்பார்வதியும் பரமேசுவரரைப் பார்த்து நல்வரவென்றுகூடச் சொல்லவில்லை. சங்கரரும் கோபத்தோடுகூடிய பார்வதியைப்பார்த்து, அனேக விதமான மரியாதை வார்த்தையினாலே சமாதானஞ்செய்தும், *பிரயோஜனப்படாதது கண்டு, சேடிகளாற் சொல்லப்பட்ட எல்லாவற்றையும் ஸர்வஞ்ஞரான பரமேசுரன் தெரிந்துகொண்டு, பக்தகோடிகளைப்பார்த்துச் சொல்லியருளுகின்றார்.

[உமாதேவியினது திருமுலைப்பாலை அருந்திய சம்பந்தனே! ஆராவின்பத் தமுதம்போலும் அருள்பெருக, திராவிடவேதத்தைப்பாடும் வாகீசனே! சீராரு மாணிக்க வாசகனே! நமது பாதத்தைச் சிந்தித்தேத்துகின்ற பரவைமணவாளனுஞ் சுந்தரனைத் தந்திடுங்கள்" என்று கட்டளையிட, மூவரும் சுந்தரரிடம் சென்று "அண்டரும் புகழும் வன்றொண்டரே! யாம் சொல்லுவதைக் கேட்கக்கடவீர்; எண்டிசையும் முனிவரும் மூவரும் யாவரும் ஏத்தும் ஈசன், பண்டு நீர் விடங்கொண்டுவந்த பரிவினால் நும்மை இன்று அழைத்த பணியைப்புகன்றோம்; இது சமயம் பசுபதியைத்தரிசித்து இறைஞ்சுவீர்" என்று அறிவித்தார்கள். அப்பொழுது சுந்தரமூர்த்திகள், ஸ்ரீ நடராஜமூர்த்தியினது திருச்சன்னிதானத்தில் வாத்தியங்கள் இயம்ப அடைந்து துதிக்க, சுந்தரருக்குப் பரிவட்டம் சாத்தி உபசரித்துப் பிறகு ஓதுவார்க்குப் பரிவட்டம் கட்டி சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம் ஓதச்செய்க. பின்பு ஸ்ரீசுந்தரர் "அடியேனை வரவழைத்த காரியத்தைத்திருவாய்மலர்ந்தருளவேண்டுமெ"ன்று நடராஜமூர்த்தியைப் பிரார்த்திக்கிறார்.]

[illegible]॥

[illegible]।
[illegible]॥ |௨௭|

---

*இந்தச்சமயத்தில் கோயிற்கதவுகள் சாத்தப்படவேண்டும்.

ஶ்ரீகண்டாயவஸிஷ்டா....

இ--ள்: மகேசரானவர் சண்டேசரையும் சுந்தரரையும் நோக்கிச் சொல்லியருளுகின்றார். "மஹாபுத்திமானான சண்டேசனே! ஆலால சுந்தரனே! உங்களிருவர்களாலேயேசெய்யத்தகுந்த எனக்குப் பிரியமானதொன்றிருக்கிறது. அதாவது பார்வதி கோபமுள்ளவளானாள். [சுந்தரனே! எம்மைநீங்காது என்றும் இடப்பாகமேவும் சுந்தரி ஊடலானாள். அவள் இன்புறச்செய்க என்று பகவான் அருளிச்செய்தார். சுந்தரர் யாதுகாரணத்தால் அம்மை பிரிந்து ஊடலாயினர்; அம்மைபாற்சென்றுகூறிற் கோபம்மிகுமோ! அடியேன் அம்மையாருக்கு உணர்த்தும்படி அருள்செய்க" என்றுவேண்ட, பகவான் அருளுகின்றார்.]

....வக்ஷ்யே ஹம் கோபகாரணம்|

லோகாநுக்ரஹஸஞ்சாரம் த்வாம் ருதே க்ருதநிரீக்ஷணம்||

தாருகாவநஸஞ்சாரம் வேஶ்யாவீத்யாம் நடம் ததா|
ருத்ரகந்யாநுஸாரஞ்ச வலயாநாஞ்ச விக்ரயம்|| |௨௯|

வீதவாஸாஶம் ஶய்யாஶ்ச வலயாஹரணயாரணம்|
ஶயநேநகந்தம் ஸர்வம் வீக்ஷ்ய தேவ்யஸ்ஸமம் கிதா:||

ஶ்ரீதேவ்யா நிவேதயாஶ்சர்ய பரிதிஶ்சேத்யதஸ்ஸிவாம்|
க்ரோதாம் தேவீம் ஸமாஶ்வாஸ்ய ஶுத்தாம் ஶவஸணியம்|| |௩௧|

"கோப காரணத்தைச் சொல்லுகிறேன். எம்மாலே பார்வதியைத்தவிர்த்துச் செய்யப்பட்டதான லோகானுக்கிரகசஞ்சாரமும், நிருத்த கேய்வாத்தியங்களைப் பார்த்தலும், தாருகாவன சஞ்சாரமும், தாஸிகளுடைய வீதியிலே நடனம்(தாண்டவத்திருவுலா) செய்ததும், அப்படியே ருத்திரகன்னியைகளுக்கு அனுக்கிரகஞ் செய்ததும், வளையல்வியாபாரம் செய்ததும், மஞ்சள் பரிவட்டம், சந்தனம் கர்தமாலிகைகள் முதலான சர்வாபரணதாரணம் செய்துகொண்டதும், ஆகியஎல்லாவற்றையும் பார்வதியின்பணிப்பெண்கள் பார்த்துச் சந்தேகங்கொண்டவர்களாய், தேவிக்குத் தெரிவித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆதலினாலே, கோ

யங்கொண்ட பார்வதிதேவியை (நீங்களிருவருஞ்சென்று) சமாதானப்படுத்தி நம்முடைய சந்நிதானத்தை அடையக்கடவீர்கள்" (என்று ஆஞ்ஞாபித்தருளினார்.)

ஊத்ரு்த்க்ஷள தள வம்ஷிகெ ஶரவஸா்ஜாள ஹக்ஷிவஸய தள॥

இ—ள்: இவ்விதம் சொல்லப்பட்ட பக்தர்களான சண்டேச சுந்தரர் இருவர்களும் [அம்மையிடம் சென்று பிரார்த்திக்கிறார்கள். மறையும் புகழ்தற்கரிய மணிவிளக்கே! பரையே! உம்மை யான்பணிந்து சொல்லுகின்றேன். கபாடந்திறந்தருள்மின்; அப்பனைப்பிரியாது அபின்னமாயிருக்கிற அம்மே! உமக்கு நான் அடிமைத்திறம்புரியப் பணித்த தேவி! கபாடந்திறந்தருள்மின்; சீகாளிப்பதிக் கவுணியருக்குத் திருமுலைப்பாலருளி, இன்னிசை மறைகேட்ட இறைவியே! கபாடந்திறமின்; சகல அண்டங்களையு மீன்றளித்த வாழ்வே கபாடந்திறமின்; ஆதிமத்தியாந்தாகிதராகிய அமலனருளிய உத்தரவைஉணர்த்த இங்குவந்தேன். கபாடந்திறமின்; நாதனென்னைத் தடுத்தாண்டநாளில் அவரைப் பித்தனென்று வாதுபேசும் வன்றொண்டன் வந்தேன்; கபாடந்திறந்தருளுக. இதனைக்கேட்ட உமைஅம்மை கதவைத்திறக்கும்படி ஆஞ்ஞாபித்தருளுகிறார். உடனே கதவு திறபட்டது.]

வாவ௰தீவஸ ளியிம்ஹ்ரா வ்ரு நத்வா ஸ்து த்வா ஶெஹ ஶ்வரீம்॥

இ--ள்! (இருவரும்) பார்வதிதேவியினுடைய ஸந்நிதியையடைந்து, அவரைநமஸ்கரித்து ஸ்தோத்திரம்செய்கிறார்கள்.

ஊவதா ெகாவஶாவெஞ்ரு தாம்யஶாஶம்ஹ்ரா வஸீரி தம்।
ஶ்ரூ கவாவிகா தயொவ௰ாக்ரு ஶவொவக்ஷொவஸம்ய
[தா॥ ।।

இ—ள்: அந்தத் தேவியைப்பார்த்து கோபசாந்தியின் பொருட்டு எங்ஙனம் சம்புவினாற் சொல்லப்பட்டதோ, அங்ஙனமே சொன்னார்கள். அவர்களுடைய வாக்கியத்தைக்கேட்டு அம்பிகை அதிகோபத்தோடு கூடினவராய்ச் சொல்லுகிறார்.

[illegible]
[illegible] ௧௪

[illegible]
[illegible] ௧௫

[illegible]
[illegible] ௧௬

[illegible]
[illegible] ௧௭

[illegible]
[illegible] ௧௮

[illegible]
[illegible] ௧௯

[illegible]
[illegible] ௨௦

[illegible]
[illegible] ௨௧

[illegible]
[illegible] ௨௨

இ—ள்: சண்டேசனே! சுந்தரனே! பரமேசுரராகிய இந்தச் சங்கரர் முற்காலத்தில் எவ்விடத்திலும், எப்பொழுதும், இந்திரன், கௌதமன், அகஸ்தியன், அருச்சுனன் முதலானவர்களை இரட்சித்தலை என்னோடுகூடவே செய்தார்; மங்களத்தைச்செய்கிற இந்தத் தேவரானவர் இப்பொழுது என்னைவிட்டுப் பிரிந்தவராய், தேவர்களையும், முனிசிரேஷ்டர்களையும், பக்தர்களையும் சம்ரக்ஷித்தலிலே ஆசையுள்ளவராயினர்; ஆஸ்தானமண்டபத்திலே கேயநிருத்தவாத்தியானுபவத்திலே மோஹிதராயினர்; சர்ப்பாபரணமுடையவராய் விலைமாதர்களுடைய வீதியையடைந்தார்;

ஈசுரரானவர் வளையல்வியாபாரமுஞ்செய்தாரல்லவா! ருத்திரகன்னிகைகளுடைய தாமரை மலர்போன்ற முகாவலோகனத்தைச் செய்தார்; (இதுவுமன்றி,) தாருகாவனத்திலே வயோதிகஇருஷி பத்தினிகளுக்குச் சுகத்தைக்கொடுத்தார்; பிரபுவாகிய மகாதேவர் பீதவஸ்திரமுடையவராய்ப் பெருங்கூத்திலே பண்டிதரானார். பிரபுவானவர் இவ்விதகாரியங்களை என்னைத்தவிர்த்துச் செய்தாரென்பதாகச் சகிகளாற்சொல்லப்பட்ட வார்த்தையைக் கேட்டுக் கோபமுடையவளானேன். சமாதானத்தின்பொருட்டுமுடியாது. (ஆனால்)என்னுடையசகோதரனாகிய மஹாவிஷ்ணுவினுடையவீட்டிலே வசிக்கப்போகிறேன். அவனாற் கொடுக்கப்பட்டதான தானியத்தினாலேயே ரட்சணத்தைச் செய்யப்போகிறேன். (அது கூடுமோஎனின்,) பர்த்தாவினாலே எந்த ஸ்திரீயானவள் விலக்கப்பட்டாளோ அவளுக்குத்தந்தைவீடுதான்கதி. அந்த (பகவானும்) அந்த ஸ்திரீகளோடுகூடவே இருக்கட்டும். நீங்களும் அவரோடு கூடவே (போய்ச்) சேருங்கள்.'' அவ்விருவர்களும் மகாதேவியினாலே இப்படிச்சொல்லப்பட்டவர்களாய் மறுபடியும் ஈசுரன்சன்னிதியை அடைந்தார்கள்.

நிவேத³யாமாஸதுஸ்தத்³தே³வீவாக்யம் ஶிவாந்திகே।
தயோர்வசநமாகர்ண்ய ப⁴க³வாந் ப்ராஹ ஸஸ்மித:॥

இ—ள்: பரமேசுரனிடத்திலே அவ்விருவர்களும் தேவியின்வார்த்தையைத் தெரிவித்தார்கள். அவர்களுடையவார்த்தையைக் கேட்டருளிய சதாசிவர் பின்பு சொல்லுகிறார்.

ஶ்ராவந்து நிஜப⁴க்தாநாம் ஸர்வஸம்பத்ப்ரத³ஸ்ஸதா³।
ஶிவம் விநா ந ஶக்தா ஹி தவ தத்³ஹி விசிந்த்யதாம்॥ |௪௪|

ததா³நீம் ஸ்வஸவீம் ப்ரத்யுவாச ந தோ³ஹிதா।
ஸக்தேஷு விஷ்ணோர்நாம ஸஹஸ்ரஸிம்ஹிதே॥ ௪௫

[illegible]
[illegible] [த³ ॰:॥

ஆகர்ண்ய தஸ்யா வசநம் ஶ்ரீகண்ட²ஸ்ஸதா³।
ப்ரீணயந் ஸ்வாத்மநோ ப⁴க்தாம் ஸ்வாத்மநாராயண:॥ |௪௭|

ஸாயாம்ருஸ்யாம்வரித்ருஜ்ஞகோவாயீசா ந்விஷம்ஹரேசு|
த்ருக்த்வா கஸ்ஹா ர கஸ்ஸம் கோஹஜெ க்திம் ஶாகம்ஶிவே||சஅ
சுரும் கொவெ நஉஹ தாத்வயாரொகா ஸக்ர க்ஷிதா:|
யாவா ஹ்ராஜி திவக்தவ்ரா ஹளரீவம் வெஶஸாம்ஶர|| |சகூ|

இ—ள்: "சண்டேசனே! சுந்தரனே! (நீங்கள் மறுபடியும் சென்று சொல்லவேண்டுவதாவது) காமிநுவர்களும் நமது பக்தர்களுக்கு நல்ல தரிசனத்தைக் கொடுக்கிறவர்களாகவும், அழகிய விமானத்திலாரோகணித்தவர்களாகவும், வீதியை அடைந்தவர்களாகவுமிருக்க, அப்பொழுது நினது சேடிகளின் பொய்யான வார்த்தைகளினுலே மோகிதையாய், பக்தஜனங்களிருக்கும்பொழுதே கோபமுடையவளாயிருக்கிருய்; சிவையே! இது என்ன. ஸ்திரீகளுக்கு ஏகாந்தஸ்தலத்திலுண்டான கோபத்தையே பூஷணமென்றும், வெளியில் பரவவிடப்பட்ட கோபத்தைத் தூஷணமென்றும் சொல்லுகிருர்கள்; ஸ்வபாவத்திலுலே குளிர்ந்த தன்மையுடையவளுக்கு இவ்விதபுத்தியானது எப்படிவந்தது; பனிவரையில் உன்னைமணந்ததுமுதல் உனது கினைவுடையவனுக இருக்கிறேன்; எந்தப் புத்திமானுவது அடையப்பட்ட அமிர்தத்தை நீத்து விஷத்தைப் புசிப்பானு? எவன்தான் செங்கழுநீர்மலரைத் தள்ளி முள்முருக்கம்பூவை அடைவான். பெருங்கோபம் செய்ய வேண்டாம். உன்னுலே லோகங்கள் சம்ரக்ஷிக்கப்பட்டன என்பதாக உங்களிருவராலும் கௌரி சொல்லப்படத்தக்கவள்." [இப்படித் திருவாய்மலர்ந்தருள அவ்விருவர்களும் தேவிசன்னிதியை அடைகிருர்கள்.]

ஞவஉத்ஞளஶம்ஹா நா தளவா நஶ்வம் வெஶஸாம்ஶரள|
ஸாத்தா நத்வொவதா தெ ஹ்வீம்யஶாஶம்கர ஹாஷிதஃ|| |ருo|
நிஶவெஜ்வதயொவபுாக்ருஉதிகு ஊா நமாத்ஜா|

இ—ள்: சம்புவினுலே இவ்விதம் சொல்லப்பட்ட சண்டேச சுந்தரர் இருவர்களும் தேவிசன்னிதியை அடைந்து, வணங்கித் துதித்துச் சம்புவினுலே சொல்லியருளப்பட்டபிரகாரம் விண்ணப்பித்தார்கள்: அவர்களுடைய வாக்கியத்தைக்கேட்டு மலைமகளானவர் அதிக கோபமுடையவராயினர். [பின்பு சுந்தரரைப்பார்த்து சுந்தர! உனக்காக வெட்கத்தைப்பாராமல் விடு

தோறும் போய்ப் பிக்ஷைவாங்கிவந்து அன்னங்கொடுத்தவரை உண்ட வாய் வாழ்த்தவேண்டாமா? இரவில் பரவைவீட்டுக்குத் தூதுசென்று உனக்குநேரிட்ட ஊடலைத்தீர்த்துப் பரவையோடு உன்னைச் சேர்த்துவைத்த கர்த்தாவை நீ சிலாகிக்கவேண்டாமா? ஆனந்தப்பெருந்தகைக்கு விடம்கொடுத்து அனைத்தும் பெற்றாய்; என்னிடம் உனது தந்திரமெல்லாம் பலிக்காது; ஏகுதி] என்று கூறியருளினர்.

[illegible] || |௫௧|

இ—ள்: பின்பு சிவபக்தசிரேஷ்டராகிய சண்டேசுரரைப் பார்த்துச் சொல்லுகிறார்.

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] || ௫௩

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible]
[illegible] ||

[illegible] |
[illegible] || |௫௪|

[illegible] |

இ—ள்: (சண்டேச!) பிரபுவாகிய சிவனர் தேவர்களுக்கெல்லாம் நாதராயிருந்தும் இந்தச் சுந்தரனுலேயே பரவையின் வீட்டைக்குறித்துத் தூதுகாரியமாக ஏவப்பட்டாரல்லவா? அது முதலாக என்னுடைய தலைவரானவர் என்னையின்றி வேறு ஸ்திரீகளிடத்தில் ஆசையுள்ளவரானர்; அத்தலைவரானவர் துதியினலே சந்தோஷப்படுத்தப்பட்டவராய்ப் பராதீனராகவுமானர்; முன்னொருகால் பிருங்கிமுனியானவன் என்னைத்தள்ளிச் சம்புவைப் பூசித்தானல்லவா; (அப்பொழுது) என்னுடைய கோபத்தினலே தண்டிக்கப்பட்ட அவன் எலும்புமாத்திரம் எஞ்சியவனாக ஆனன்;

அவருக்கு உருவமும் பெயரும் தொழிலும் என்றுலேயே உண்டாயின. அந்த மங்களத்தைச் செய்யக்கூடியவரான ஈசுரர் என்றற் கொடுக்கப்பட்ட எல்லாவற்றையுமடைந்து கூத்தாடுகிருர். அஃதெங்ஙனமாயினுமாகுக; யாவனெருவனுலே உபாசிக்கப்பட்டாரோ, அவனேடு பித்தன்போலவே திரிகிருர்; இவருடைய சிநேகிதத்திலும் விரோதத்திலும் எனக்கென்ன மங்களமிருக்கிறது.

கௌரியானவர் இந்தப்பிரகாரம்சொல்லி, மேலும் சண்டேச சுந்தாரிருவர்களையும் பார்த்துச் சொல்லுகிருர்.

ஶ்ரீப்ராணநாயகஜதீவ்ரதாபஸமயம்ஸசவிதம் ॥ ௫௭
ஸாந்த்ரம்ய சைத்யம்ஸ்நாநாயஹிமசைத்யம்ஸம்பீதஜம் ।
க்ஷௌமேயகம்சவஸநம்கவசராமஸம்வஹநம் ॥ ௫௮ ॥
கஸ்தூரிதிலகம்சந்தனவிலேபனாநிவஹாஸதாவி ।
ஜாதீகம்ஶாதிகஸ்ஸௌரபாஸ்வஸௌரஸநம் ॥ ௫௯ ॥
ஹாஜ்யம்சஷட்ரஸோபேதம்தாம்பூலம்சயதாக்ரமம் ।
ஸர்வமேதத்த்வரிதம்ஜ்ஞாபயாமிஞாநாம்தக ॥ ௬௦ ॥
விஷ்ணுப்ரஹ்மாதிஸம்ஸேவ்யவாஹவஜ்ராவியஜ்ஜ்யாயிம் ।
ஸ்பாநஹஸ்தவஸ்த்ரம்மோமஜவ்யாவ்யாஜிநாம்பர ॥ ௬௧
ஶ்ரமம்வஹ்நிம்ஸ்வயராஜம்சுவஸ்ஸாயாம்யநுஹர: ।
கவாயஸாயாஹரணைர்விக்ஷாரட திதீநவக ॥ ௬௨ ॥
சுகயேயாணாதிகம்வாஸாம்ஸாந்த்ரவிதலஸமாதஜாந்தவி ।
வஹநுஸம்ஸ்ருஷ்டஸாயாதிஸாஹஸம்கம்ரதேஸா ॥ ௬௩

இ—ள்: சண்டேசனே! சுந்தானே! என்னுடைய பிராணநாயகரென்கிற பிரீதியினுலே ஸ்நானத்தின்பொருட்டு வாஸனைத்தைலமும், குளிர்ச்சிபொருந்திய பனிநீர்போன்ற தீர்த்தமும், வெண்பட்டாடையும், கர்ப்பூராதி வாஸனைகளோடுகூடிய நல்ல அகிற்சந்தனமும், கஸ்தூரித்திலகமும், பகுவிதமான இரத்தினுபரணங்களும், ஜாதிமுல்லை முதலான மலர்மாலைகளும், உயர்ந்த ஆசனமும், அறுவகைச்சுவையோடுகூடிய போஜனமும், தாம்பூலமும் எல்லாம் வரிசைக்கிரமமாகச் சமர்ப்பிக்கப்பட்டன. காமா

ந்தகரான புரஹரர் (என்றுற் சமர்ப்பிக்கப்பட்ட) எல்லாவற்றை யும் தள்ளிவிட்டு விஷ்ணு பிரமா முதலானவர்களாற் சேவிக்கத் தகுந்த பாதகமலங்களையுடையவராயிருந்தும் ஹரரென்னும் பர மர் கனத்த ஜடாபாரத்தையுடையவராயும், சுடுகாட்டுச் சாம்ப லாற் பூசப்பட்ட திருமேனியையுடையவராயும், யானைத்தோல் புலித்தோல் ஆடையுடையவராயும், மானையும் தீயையும் பாம் பையும் எலும்புமாலைகளையும் தரித்துக்கொண்டு, கபாலங்களா லான மாலையை ஆபரணமாகவுடையவராய் எளியவன்போலப் பிக்ஷை எடுக்கிறார். (இன்னும்) எருக்கு முதலான மலர்களையும், அறுகம்புற்களையும், தலையிலே தரித்துக்கொண்டு வருகிறார். எப் பொழுதும் சாஹசத்தைச் செய்கிறார்.

கிம்வாஸர்வ்ஸிதம்ஜு ॰ஃவம்ஜு ॰ஃவாஜு ॰ஃவதா ॰ஃஹஸ|
ஸ்வநாத்வதிதெமாவெஹிஹா ॰வொஜுரொக்தைதஃ
ஜு ॰ஸைஃஸ்னாத்வாக்ரு ॰ஐஹ ஃவமொவஸம்தாவிதொஹர
ஸம்|
வரஸ்வாஹதஃஐபூரஃவஸளஃவெயவவரிரக்ஷிதஃ॥ கரு
ஏஜ்ஹாரவஹநாஸக்தஃவாஜ்ஞஹஃவெநதாவிதஃ|
ஸாக்ருஜுத்தஸிரவாதவஸம்ஜாதவ்ரணஸ்தகஃ॥ |கசு|

மாம்ஷீவதாஃவெநாவிஸம்ஹ்ராத்வவ்ரணஸ்தகஃ|
ஃஹ ॰ஃபு ॰ஹ ॰ஸ்ஸாயாதஃஃவெயவவரிவாஜிதஃ॥ கஎ

இ—ள்: (பக்தர்களே!) பின்னுமந்தப் பரமசிவனுடைய துக்கமான சரித்திரமானது துக்கத்திலெல்லாம் பெரிய துக்ககர மானது. அந்தப் பரமசிவனானவர் தினந்தோறும் ராசனுக்குப் பாற்குடம்கொண்டுசெல்லும் ஓரிடையனுடைய காலையிடறுதலி னாலே இடையன்விழும்பொழுது உடைந்தபானையின் மத்தியிலி ருந்து சொரிவதான பாலினாலே ஸ்நானஞ்செய்து (அதனாற்) கோ பங்கொண்ட இராஜனாலும் இடையனாலும் மிகவுமடிக்கப்பட்டுக் கோடரியினாலே பிளக்கப்பட்ட சிரசையுடையவராய், என்னாலே யே சம்ரக்ஷிக்கப்பட்டார். (மதுரையிலே வந்தியின் கூலியாளாகச் சென்று,) மண்சுமக்க அசத்தராய் பாண்டியராஜனாலே அடிக்கப் பட்டார்; சாக்கியநாயனாராலே வீசப்பட்ட கல்லெறியினாலேயுண்

டான தலைக்காயத்தோடும், அருச்சுனனுடைய காண்டீபமென்னும்வில்லடியினலேயுண்டான தலையிலுள்ள காயத்தோடும் அடிக்கடி வந்தவராய், என்னலேயே பரிபாலிக்கப்பட்டார். (திற்க.)

ஶ்ரீஹஸ்தாத்தஸ்தாஶ்ரஜஶிரஸ்ஸ்ஷவிதெவொஜஹெஸ்வர:|
ஶ்ரீஜகாஜஹ்ராஜஹ்லதெவாஸளயாநூஸாராநூஜஶ்லஹ:‖ கஅ

ஜஷ்ட காஸ்வஸ்வணாஹஜய:க்ரஶுவாராத்ஸராஹாயஹி|
தக்ஷாஜெவஸ்ராஜகாஜஹ்ராஜஹ்லதெவயாநூம்ஜஜளஜஜ‖ |கசு|

ஸவஹ்ராயஹ்ராநகாஜெவிதயெவொரா நூஜெஸ்வர:|
தெதெநெவஸவஹ்ஜீவாநாம்ரக்ஷணஶாஜயா க்ரதழ‖ எo

கிஞ்ஜநவஹ ஜநாக்தநஜஜவெக்ஷஸ்லிவொயஜி|
ஶஹம்ஸவஹ்வஸ்ராநெநவஸிதஷ்டாஹவாஜிவெ‖ எக

ஶுதீயவெஸவகஸ்வாவிஜவ்வுடீஜநதாஶிதா:|
ஹவம்த்விதிவவக்தவ்ய:யாவாஹ்ராம்வநூஶெவர:‖ |எஉ|

இ--ள்: சண்டேசரே! சுந்தரரே! இது இருக்கட்டும்; மகேசுரனும் மகாபிரபுவுமாகிய அந்த தேவரும் பொன்மலையிலே (இருந்துகொண்டு) எனக்கு நாழிநெல்லையே கொடுத்தார். (இந்த) சுந்தரனின்பொருட்டு செங்கற்களைச் சுவர்ணமாகச்செய்து கொடுக்கவில்லையா? அந்தக்காலத்திலும் எனக்கு ஒரு நாழிநெல்லைத்தான் கொடுத்தார். மகேசுரரானவர்சமஸ்தர்களுக்கும்பொருள்கொடுக்கிறகாலத்திலும் எனக்கு அப்படியே (நாழிநெல்லையே) கொடுத்தார். அந்த நாழிநெல்லினலேயே எல்லா ஜீவராசிகளுடைய ரக்ஷணமும் என்னுற் செய்யப்பட்டது. அதிகமாகச் சொல்லுவதினுல் என்ன. சிவனுர் என்னில் அபேக்ஷையுடையவராகவிருப்பாரானல் ஸமஸ்தமான கிராமம், பூமி, ஆபரணம் முதலான எல்லாவற்றையும் (ஸர்வஸ்வதந்திரமாக எனக்கு அனுபவிக்கும்படி தான் சாசனம் எழுதி) கொடுத்துவிடுவதினலே சந்தோஷப்பட்டவளாவேன். உம்முடைய சேவகஜனங்களும் என்னுடைய சேடிசனங்களினுல் அடிக்கப்பட்டவர்களாக ஆகவேண்டும் என்று உங்களிருவராலும் சொல்லப்படவேண்டும் (என ஆஞ்ஞாபித்தார். இருவர்களும் சிவசன்னிதியை அடைகிருர்கள்.)

இத்யுக்தௌ தௌ ஜகததுஃ ஶம்பும் தேவஸந்நிதௌ ।
ஊசாதே கிம் கரிஷ்யாவஃ தேவீகோபோ ந ஶாம்யதி ॥ ॥

இத்யேவ தத்வசஸ்ஸர்வம் தேவ்யா வாக்யம் ஶிவாந்திகே ।
தேவ்யூசதுஃ ஸர்வம் ஸ்மேரஹாஸ்யாம்புஜஃ ॥ ।௭௪।

நிஶம்ய தந்மஹாதேவஃ தாவுபௌ வாநரௌ வீக்ஷ்ய ।

இ—ள்: இப்படிச்சொல்லப்பட்டவர்களான சண்டேச சுந்தரரிருவரும் சம்புவைப்பார்த்துச் சொல்லுகிறார்கள். நாங்கள் என்செய்வோம்; தேவியின் கோபமானது சாந்தி அடைகிறதில்லை; (ஆயினும், இப்படியானல் ஆகுமென்று) அவ்விருவரும் பரமசிவனிடத்திலே தேவியினுடைய வார்த்தைகளனைத்தையும் இவ்வாறு சொன்னார்கள். மகாதேவரானவர் புன்சிரிப்போடு கூடிய முகாரவிந்தமுடையவராய் தேவியினுடைய வாக்கியமெல்லாவற்றையும் கேட்டு, அவ்விருவர்களையும் பார்த்து மேலும் சொல்லுகிறார்.

ஶ்ரீஶைலஜே த்வத்ப்ரஸாதேந ஹ்யஹம் ஜகதீஶ்வரஃ ॥ ।௭௫।

த்வாம் விநாஹம் ந ஶக்தோஸ்மி சலிதும் வாபி ஶங்கரி ।
த்வதீயம் நிகிலம் ஸர்வம் த்வமேவ தபஸஃ ஃபலம் ॥ ।௭௬।

கோபம் மா குரு கல்யாணி தவசித்தாநுஸார்யஹம் ।
தயாம் மயி நிதேஹி த்வம் ப்ரீதிஸ்தே க்ரியதே மயா ॥ ।௭௭।

யுவாப்யாமிதி வக்தவ்யா கௌரீ தேவஸ்ய ஸந்நிதௌ ।

இ—ள்: மலைமகளே! உன்னுடைய அனுக்கிரகத்தினாலே ஜகதீசுரனாயிருக்கிறேன், சங்கரியே! உன்னையின்றி அசைவதற்குக்கூட நான் சக்தியில்லாதவனாயிருக்கிறேன்; எல்லாம் உன்னுடையதே; நீயே என்னுடைய தவத்திற்குப் பிரயோஜனம்; கோபத்தைச்செய்யாதே; நான் உன் சித்தம்போல்நடக்கிறவனே; என்னிடத்தில் தயையைச் செய்யவேண்டும். என்னாலுன்பொருட்டுப் பிரீதியானது பூர்த்திசெய்யப்படுகிறதுஎன்று உங்களிருவராலும் தேவியானவள் சொல்லப்படவேண்டும். (என்று அனுப்ப, அம்மையார் சன்னிதியை அடைகிறார்கள்.)

வ॰நதெ ச வீச்வத்ஸ்ய ஶங்கரஹர்ஷணம்॥ ௭௮

ஏவமாவாப்யாம் க்ஷந்தவ்யா: க்ருபயா ஶங்கரப்ரியே!
இத்யுக்த்வா ஸஹஸா ஶிவம் நமஸ்காரம் வா வஸா வரம்॥ ௭௯

யாவஹம் ஸ்வரம் ஶ்வா வக்த்வா ஸ்ஸக்ருதா நதி:।

அவ்விருவர்களும் பின்பு தேவியைநோக்கி "சங்கரப்பிரியையே! உம்மால் அபராதங்கள் எல்லாம் பொறுத்துக்கொள்ளத்தக்கன" என்று சங்கரராற் சொல்லப்பட்டபடி சொன்னார்கள், பின்பு அந்த மகேசுவரி பிரியத்தோடு கூட உங்களிருவர்களாலும் வேகமாகச்சென்று (எனது நாதனுக்கு) என்னாற் செய்யப்பட்ட நமஸ்காரமானது சொல்லப்படத்தக்கது என்று சொன்னார்.

இதி ஶ்ரீஸமாதிஷ்டௌ தௌ வந்தஸ்தம்ஸமாதரௌ॥ ௮௦

ஶிவஸ்ய ஸந்நிதிம் ப்ராப்ய ததாம் வா வசதீரிதம்।
ஶம்போ தேவஸ்ய நிஶம்ய ஶ்ரீவீதேத்யா தயாகரோத்॥ ௮௧

இ—ள்: இப்படிக் கௌரியினாலே ஆஞ்ஞாபிக்கப்பட்ட சண்டேசுரர் சுந்தரர் இருவரும் சிவ சந்நிதானத்தையடைந்து பார்வதியினாலே ஆஞ்ஞாபிக்கப்பட்டதைக் கூறினார்கள். மகாதேவரும் அதைத் திருச்செவிசாத்தியருளித் தேவியின் விருப்பத்தின்பொருட்டு அப்படியே (பார்வதிதேவி கேட்டுக்கொண்டபடியே) செய்தார்.

[இந்தச்சமயத்திலே, பட்டயமெழுதி அழகிய சிற்றம்பலமுடையாரென்று கையொப்பமுமிட்டு, தேவியிடம் வாசித்துச் சமர்ப்பணம் செய்து, மட்டையடிநடத்தவேண்டும். பின்பு ஸ்ரீசுந்தரர் ஓதியதாகச் சாமவேதாத்யயனம்செய்தவருக்குப் பரிவட்டம் கொடுக்கவேண்டும். தேவி சுந்தரரைப்பார்த்து, "சிந்தையில் அன்புகூர்ந்த சுந்தரனே! உன்னை எள்ளிய புன்மொழிகளை நீக்கிக்கொண்டேன்; உன்னிடத்து வேதம்கேட்டு இன்பத்தாழ்ந்தேன். அணுக்கத்தொண்டுபூண்டுகொண்ட சுந்தரனே! எந்தையை அடையப்பெற்றேன்; இனிப்பேறு இதன்மேல் எனக்குஉண்டோ" என்று ஆசியும் வாழ்த்தும் கூறினார்.]

प्रीता साऽभवद्देवी देवस्य सन्निधिमागता ।
नत्वा स्तुत्वा शिवं देवी सर्वभक्तसमावृता ॥ ८२ ॥
शिवस्य वामभागं च सा श्रित्वा विबभौ भृशम् ।
एवं संतोषयुक्तौ तौ जगतः पितरौ शिवौ ॥
संयुक्तौ सर्वलोकानामवनं कुर्वाते सदा ।

இ—ள்: தேவியானவள் சமஸ்தபக்தராலும் சூழப்பட்டவராய், தேவருடைய சமீபத்தை அடைந்து வணங்கி சந்தோஷமுடையவராயினர், அவ்வம்பிகையானவர் சிவனை நமஸ்கரித்துத் தோத்திரஞ்செய்து, சிவபெருமானுடைய இடப்பாகத்தையுமடைந்து விளங்கினர். இந்தவிதமாக, சந்தோஷயுக்தர்களும் லோகஜனகர்களுமாகிய அந்த பார்வதீபரமேசுவரர்களிருவரும் ஸமஸ்தலோகங்களையும் எப்பொழுதும் பாலனம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

संवादमिमं भक्त्या यः शृणोति द्विजसत्तमः ॥ ८४ ॥ इह
भुक्त्वा सर्वभोगांश्च मोक्षसाम्राज्यमश्नुते ।
इति सूतमुखाच्छ्रुत्वा मुनयः शिवयोः कथाम् ॥ ८५ ॥
संतोषसागरे मग्नाः विस्मयं परमं गताः ॥

இ—ள்: யாவனொருவன் ஆதிதம்பதிகளுடைய ஸம்வாதரூபமான திருவூடலைப் பக்தியோடு கேட்கிறானோ, அவன் இஹத்திலே ஸர்வபோகங்களையுமனுபவித்து, சாஸ்வதமான மோக்ஷசாம்ராஜ்யத்தையுமடைகிறான். இப்படி பார்வதீபரமேசுரர்களுடைய கதையை முனீசுவரரவர்கள் சூதமகாரிஷியிடமிருந்து கேட்டு சந்தோஷசமுத்திரத்திலே மூழ்கியவராய், மேலான ஆச்சரியத்தை அடைந்தார்கள்.

ஸ்ரீ பார்வதீபரமேசுவரர்களுடைய
பிரணயகலஹவர்ணனம்
சம்பூர்ணம்.

சுபம்.

𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌶𑍁𑌦𑍍𑌧𑌪𑌤𑍍𑌰𑌿𑌕𑌾 ॥

𑌪𑍁𑌟𑌿	𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿	𑌅𑌶𑍁𑌦𑍍𑌧𑌮𑍍	𑌶𑍁𑌦𑍍𑌧𑌮𑍍
௨	30	𑌬𑍃𑌥𑌕𑍍	𑌪𑍃𑌥𑌕𑍍
௪	3	𑌬𑍃𑌥𑌕𑍍	𑌪𑍃𑌥𑌕𑍍
௫	7	𑌬𑍃𑌥𑍇𑌷𑍍𑌟𑌾	𑌪𑍃𑌥𑍇𑌷𑍍𑌟𑌾
௬	23	𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌾	𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑍍𑌯
௭	17	𑌪𑌾𑌵𑌕𑍀	𑌸𑌾𑌪𑌾𑌵𑌕𑍀
௭	14	𑌵𑍀𑌰𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑌂	𑌵𑍀𑌰𑍍𑌯𑌟𑌨𑌂
௯	8	𑌕𑍃𑌤𑌵𑌾𑌨𑍍𑌨𑌷𑌿	𑌕𑍃𑌤𑌵𑌾𑌕𑍍𑌷𑌿𑌂𑌨
௯	13	𑌶𑌪𑍃𑌕𑍍𑌤	𑌸𑌪𑍃𑌕𑍍𑌤
௧௩	12	𑌉𑌦𑍍𑌧𑌤𑌾	𑌉𑌂𑌦𑍍𑌧𑌤𑌂
௧௪	17	𑌪𑍃𑌣	𑌬𑍃𑌣
,,	18	𑌪𑍃𑌣	𑌬𑍃𑌣
௧௫	6	𑌇𑌯𑌃	𑌇𑌪𑍀𑌃
,,	12	𑌤𑍍𑌵𑌤𑌿𑌯𑌶𑍇𑌵𑌕𑌃	𑌤𑍍𑌵𑌤𑍀𑌯𑌶𑍇𑌵𑌕𑌾𑌃
௧௭	3	𑌇𑌹𑍇𑌶𑌾𑌨𑌿	𑌇𑌹𑍇𑌶𑌾𑌨𑍀
,,	12	𑌬𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌵𑌧𑌤𑌾𑌂	𑌬𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌵𑌧𑌤𑌾𑌂
௧௮	13	𑌶𑍃𑌣𑍋𑌤𑍍𑌵𑌿𑌹	𑌶𑍃𑌣𑍋𑌤𑍀𑌹

உ

அச்சுவேலி

சரசுவதிவித்தியாசாலை அதிபர்

சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள்

எழுதி அச்சிட்ட

புத்தகங்கள்.

		ரூ. அ. பை.
சிவபூசை விளக்கம்	... .	1 - 8 - 0.
பிராசாததீபம் உரையுடன்	... ...	0 - 6 - 9.
சிராத்ததீபிகை	... ...	0 - 2 - 6.
விநாயக பாத்துவம்	.. ..	0 - 6 - 9.
சைவப்பிரகாசிகை முதற் புத்தகம்	... ...	0 - 2 - 0.
,, இரண்டாம் புத்தகம்	...	0 - 2 6.
,, மூன்றும் புத்தகம்	... ...	0 - 3 - 9.
,, நான்காம் புத்தகம்	... ...	0 - 5 - 0.
,, ஐந்தாம் புத்தகம்	... ...	0 - 7 - 0.
அநுட்டான அகவல் (கமலைஞானப்பிரகாச தேசிகர் இயற்றியது) உரையுடன்	... ...	0 - 1 - 6.
மகோற்சவ விளக்கம்	(அச்சில்)	
ஷுணயகஊஹவண-ிநம		0 - 4 - 0.

கிடைக்குமிடம்:—

ச. கு. வைத்தியேசுவரக்குருக்கள்,
அச்சுவேலி,
யாழ்ப்பாணம்.

அரு. இராமநாதக்குருக்கள்.
கண்டனூர்,
இராமநாதபுரம் ஜில்லா.

சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை,
20, காரணேசுரர் கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை.

கந்தபுராணநவநீதம் ... ... ரூ. 1 - 0 - 0.

சி. சிவசம்புநாதையர்.
ஏழாலை,
சுன்னுகம், யாழ்ப்பாணம்.